தலைப்பு 112 – வெளிநாட்டலுவல்கள் அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 112 – வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டலுசல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையான்மைகள் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

	கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**7002-0-0-35-13 கொண்ட கட்டுநிதி கணக்கு**		
(i)	தூதரகங்களினால் பெறப்பட்டு பயன்படுத்தா இல்லத்திற்காக வைக்கப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 15,389,115 பாதுகாப்பு வைப்புத் தொகை, 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக தீர்க்கப்பட்டிருக்கவிலலை. இந்த பெறுமதியினுள் மூடப்பட்ட பிரங்க்பர்ட் (Frankfurt) தூதரகங்களிற்குரிய 2007, 2011 மற்றும் 2013 ஆண்டுகளில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,234,933 வைப்புத் தொகையும் காணப்பட்டது.	பாதுகாப்பு பிணை வைப்பை அறிவிட முடியாது போன சந்தர்ப்பங்களில் அதற்காக ஏதேனும் உத்தியோகத்தர் நேரடியாக பொறுப்பேற்க வேண்டுமெனில், குறித்த உத்தியோகத்தர் சேவை நிலைய இடமாற்றத்தின் போது செலுத்தும் பிரயாண படிகளிலிருந்து குறித்த தொகையை அறவிடவும் ஓய்வு பெறுதலின் போது அரசிற்கு உள்ள கடப்பாடாக அந்த உத்தியோகத்திரின் கோரப்படாத சான்றிதழில் குறிப்பிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் மூடப்பட்டுள்ள பிரங்க்பர்ட் கொன்சல் நாயக அலுவலக கட்டிடத்தின் உடன்படிக்கை நிபந்தனை பிரகாரம் உரிய காலத்திற்கு முன்னர் குறித்த உடன்படிக்கையிலிருந்து நீங்கிய காரணத்தால், பாதுகாப்பு வைப்பை மீண்டும் வழங்க இயலாதுள்ளது.	பயன்படுத்தாத இல்லதிற்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பை அறவிட நடவக்கை எடுக்க வேண்டும்.

(ii)	நி.பி. 371 பிரகாரம் நிமித்த உப கட்டுநிதியை குறித்த பணி முடிவடைந்தவுடனே தீர்க்க வேண்டிய போதும், 26 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 10,415,296 தொகையை 10 ஆண்டுகளிற்கு அதிககாலமாக தீர்த்திருக்கவில்லை.	2012 ஆண்டில், இலங்கையின் பிரதி விம்பத்தை மேம்படுத்தும் நோக்கில் வொசிங்டனில் நடாத்திய மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் திறப்பு விழாவிற்காக சனாதிபதி செயலகத்தினால் வழங்கிய நிதிஏற்பாடு போதாததால் தேவையான எஞ்சி தொகையை சனாதிபதி செயலகத்தின் மூலம் மேலதிக நிதிஏற்பாடாக பெற்று பின்னர் தீர்க்கும் நோக்கில் அதன் எஞ்சிய தொதையை முற்பணமாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், அது தொடர்பாக சனாதிபதி செயலகத்திடம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.	பொறுப்பான உத்தியோகத்தரை இனங்கண்டு நிமித்த உப கட்டுநிதிளை தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	**7002-0-0-35-24 கட்டுநிதி கணக்கு**		
(i)	2024 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 1,399,843,516 ஆன கட்டுநிதி மீதியினுள் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 954,931,151 ஆனதுடன் அதில் ரூபா 95,418,299 வழியில் தொகையாவதுடன் ரூபா 859,512,852 தொகை தூதரகங்களிற்குரிய மீதியாகும். எனினும் கணக்கு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை பிரகாரம் இந்த பண மீதியினுள் சிட்னி, திரிபோலி மற்றும் அபூதாபி ஆகிய மூடப்பட்ட வெளிநாட்டு மூன்று தூதரகங்களிற்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 13,996,985 பண மீதியொன்று காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட வங்கி கணக்கு தொடர்பான தர அறிக்கை பிரகாரம் திரிபோலி தூதரகங்களிற்குரிய பண மீதி குறிப்பிடப்படவில்லை.	2024 திசெம்பர் 31 திகதிக்கு கட்டுநிதி கணக்கின் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியை காட்டப்படும் அட்டவணைக்கு 2011 ஆண்டில் மூடப்பட்ட திரிபோலி தூதரகத்தின் வங்கிக் கணக்கின் மீதியை உள்ளடக்கியிருக்காத காரணத்தால் அந்த தூதரகத்தின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்குரிய 2011 பெப்ரவரி 28 திகதிய வங்கிக் கூற்றின் பிரகாரம் நிலவிய மீதியை மாத்திரம் அமைச்சிடம் காணப்படுவதால் அத்திகதிக்கு காசுப் புத்தகத்தில் காணப்பட்ட மீதி தொடர்பாக எந்தவித தகவலும் அமைச்சிடம் காணப்படவில்லை. எவ்வாறாயினும், குறித்த வங்கி மீதியான ரூபா 3,066,628 (அமெரிக் டொலர் 27,156) தொகையை குறித்த அட்டவணையிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	மூடப்பட்ட வெளிநாட்டு தூதரகத்திற் குரிய வங்கி கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	வெளிநாட்டு தூதரகத்திற்குரிய 2024 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 420,752,603 ஆன தீர்க்கப்படாத உப கட்டுநிதி மீதியில் ரூபா 57,905,530 தொகை தூதரக ஆளணியினர் குடியிருக்காத இல்லங்களிற்காக வைக்கப்பட்ட 131 பாதுகாப்பு	வெளிநாட்டு தூரங்களிற்கு நியமனம் பெறும் புதிய உத்தியோகத்தர்களிற்கு புதிய வீடுகளை பெற்றுக் கொள்ளும் போது மாதாந்த வாடகை மிகவும் உயர்வாக இருப்பதால், அநேகமாக குறித்த உத்தியோகத்தரின் முன்னோடி பாவித்த இல்லத்தையே புதிய உத்தியோகத்தரும் பாவிக்க உடன்படுகின்றார். இந்த முறையை பின்பற்றுவது இலங்கைக்கு நிதிரீதியாக	தகவலிற்காக உரிய அறிகையிடல் ஒன்றை போணிக் கொண்டு பொறுப்பான உத்தியோகத்தரை

	வைப்புக்களிற்கு ஆனதாகும். இந்த ரூபா 57,905,530 பாதுகாப்பு வைப்பு பெறுமதியில் 5 ஆண்டுகளிலும் குறைந்த ரூபா 11,108,252 உம் ஆண்டு 5-20 இற்கிடையிலான ரூபா 44,408,759 உம் 20 இலும் கூடிய ரூபா 2,388,516 உம் ஆனதுடன் அந்த வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகவும் இலாப கரமானதாகும். நீண்ட காலமாக சில உத்தியோகத்தர்களினால் ஒரே இல்லத்தை பாவிப்பதால் இந்த இல்லத்திற்கு ஏற்படும் பல்வேறு பராமரிப்பு பிரச்சினைகளின் மீது குறித்த இல்ல உரிமையாளரினால் வைப்பினை மீள் செலுத்துவதில்லை. குறித்த நட்டத்திற்காக உண்மையாக பொறுப்பாவது எந்த உத்தியோகத்தர் என்பதனை குறித்துரைத்து இனங்காண முடியாததால் பொறுப்பான உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதும் கடினமாகவுள்ளது. சுமார் 10 ஆண்டுகளிற்கு முன்னர் செலுத்திய இந்த முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது எந்த உத்தியோகத்தரின் பெயரில் என்பதனை கண்டறிவரு மிகவும் கடினமான போதும், இது தொடர்பாக தொடர்ந்தும் தகவல்களை அறிந்து நடவடிக்கை எடுக்க உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டது.	இனங்கண்டு தீர்க்கப்படாத வைப்புக்களை தீர்க்க செயற்பட வேண்டும்.
(iii)	2022 ஆண்டில் மூடப்பட்ட சிட்னி, பென்க்பர்ட் மற்றும் சய்ப்ரஸ் ஆகிய மூன்று தூதரகங்களிற்குரிய இல்லங்களிற்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பு ரூபா 9,139,919 தொகையை தீர்த்திருக்கவில்லை.	வாடகை உடன்படிக்கை காலாவதியாக முன்னர் வெளியேறியதன் மீது வைப்பினை அறவிடுவது பிரச்சினைக்குள்ளாகி உள்ளது. எனினும் தற்போது இந்த தூதரகங்களில் செயற்பாடுகளை மேவுகை செய்ய ஒப்படைத்துள்ள தூதரகங்கள் ஊடாக குறித்த தொகையை மீண்டும் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்கப்பட்ட வருகின்றது.	வைப்புக்களை தீர்த்துக் கொள்ள விரைவில் நடவடிககை எடுக்க வேண்டும்.
(iv)	நி.பி. 371 பிரகாரம் நிமித்த உப கட்டுநிதியை குறித்த பணி முடிவடைந்த உடனே தீர்க்க வேண்டிய போதும் 2024 திசெம்பர் 31 திகதிக்கு தூதரகங்களில் தீர்க்கப்படாத நிமித்த உப கட்டுநிதி ரூபா 4,373,096 தொகை காணப்பட்டது. இங்கு 5 ஆண்டுகளிற்கு குறைந்த ரூபா 2,151,104 தொகையும் 5-10 ஆண்டுகளிற்கு இடையே ரூபா 1,802,265 தொகையும் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 419,727 தொகையும் காணப்பட்டது.	இந்த உப கட்டுநிதிகளில் அநேகமானவை குறித்த பணிக்காக போதிய நிதிஏற்பாடு கிடைக்காத காரணத்தால் கட்டுநிதியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	நிமித்த உப கட்டுநிதியை தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 50 (II) பிரகாரம் மதிப்பீடுகளை முடியுமானவரை முழுமையாக மற்றும் சரியாக தயாரிக்க வேண்டிய போதும், 08 மீண்டெழும் செலவு விடயங்களில் ரூபா 751,301,915 மற்றும் 07 மூலதன செலவு விடயங்களில் ரூபா 355,140,953 ஆன நிதிஏற்பாடு 54 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீசசளவில் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	மதிப்பீடுகளை தயாரிப்பது நிதிப்பிரமாணம் 50 (II) பிரகாரம் முழுமையாக, சரியாக தயாரித்துள்ள போதும் நிதிஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதிஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள செலவின விடயங்களில் 2024 ஆண்டிற்காக ஒதுக்கியிருந்த வருடாந்த நிதிஏற்பாட்டிலிருந்து ஆண்டினுள் செலவிட நடவடிக்கை எடுத்த போதும் திறைசேரியினால் வழங்கிய அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க நேரிட்டதன் மீது செலவினை கட்டுப்படுத்தியமை மற்றும் முகாமை செய்தமை, ஆண்டினுள் அவ்வப் போது ஆளணி பற்றாக்குறை காணப்பட்டமை, பாரியளவிலான திருத்தங்கள் ஏற்படாதமை, ஆண்டினுள் பாரிய அன்னிய செலாவணி விகிதத்தின் ஏற்ற இறக்கம் காரணமாக இலங்கை ரூபாவின் பெறுமதி கவனிக்கத்தக்க அளவு அதிகரித்தமை போன்ற காரணங்களால் எதிர்பார்த்த செலவுகள் ஏற்படாதமையும் காரணமானது.	மதிப்பீடுகளை இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்க வேண்டியதுடன் கிடைத்த நிதிஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்த திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

3.3 சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	அவதானிப்பு		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 187	தினசரி பெறுவனவுகள் நாள்தோறும் அல்லது முடிந்தளவு தாமதமின்றி வங்கியிலிட வேண்டிய போதும் குவைட் தூதரகத்தில் 2024 ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் தினசரி பெறுவனவுகளை வங்கிலிடும் போது 04 நாட்கள் முதல் 22 நாட்கள் வரையான காலம் தாமதித்திருந்தது.	தூதரகத்தின் தூரக உதவி உத்தியோகத்தர் மகப்பேற்று விடுமுறை பெற்றுள்ளதால் சிலரால் மேற்கொள்ளப்படும் கடமைகள் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் தினசரி பெறுவனவுகளை வங்கிலிடுவது தாமதமாகியுள்ளது. அந்த கால எல்லை முடிவடைந்த பின்னர் இவ்வாறான நிலைமை ஏற்படவில்லை.	நிதிப்பிரமாணம் பிரகாரம் தினசரி பெறுவனவுகளை தாமதமின்றி வங்கியிலிட வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 880	பிணை கட்டளை சட்ட பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக நிதி அமைச்சின் அறிவுரையை பெற்று நடவடிகக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் பிரகாரம பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை தேவைப்பாட்டை நிறைவு செய்ய வேண்டும்.
(ஆ)	2018 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 04/2018 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 1.3.1 மற்றும்	ஒவ்வொறு வாகனத்தையும் 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிட்டு பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டிய போதும், 2023 ஒக்டோபர் 24 திகதி 72 வாகனங்களிற்காக மதிப்பீட்டறிக்கை பெற்றுள்ள போதும் அவற்றில் 62	நிதிக்கூற்றுக்களில் கொள்வனவு பெறுமதி குறிப்பிடப்பட்டள்ள 62 வாகனங்கள் தொடர்பாக புதிய மதிப்பீட்டு பெறுமதியை உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை	மதிப்பீட்டு பெறுமதியின் மீது சொத்துக்களை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	1.3.6 பிரிவுகள்	வாகனங்களிற்கு நிதிக்கூற்றுக்களில் புதிய மதிப்பீட்டுத் தொகைக்கு பதிலாக கொள்வனவு பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்தது.	வழங்கப்பட்டது.	
(இ)	1985 செப்டம்பர் 10 திகதிய அமைச்சின் அறிவுரை கோவையின் இலக்கம் 101 இன் திருத்திய 1971 மார்ச் 31 திகதிய இலக்கம் X – 365 கொண்ட அமைச்சின் சுற்றறிக்கை அறிவுரை கோவையின் இலக்கம் 2 (b) ii	சில அவசர மருத்துவ சிகிச்சையின் போது தூரகம் அமைந்துள்ள நாட்டில் அதற்கு தேவையான மருத்துவ வசதிகள் இல்லையெனில் அது பற்றி அங்கீகார மருத்துவர் அல்லது வைத்தியசாலையிலிருந்து மருத்துவ வசதியுள்ள அன்டிய நாட்டையும் குறிப்பிட்டு மருத்துவ சான்றிதழ் ஒன்றுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உரியவாறு செயற்படாது ஒஸ்டிரியாவின் வியானாவில் இலங்கை தூரகத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் அறுவை சிகிச்சையை ஐக்கிய அமெரிக்கவில் வைத்தியசாலை ஒன்றில் 2019 ஆகஸ்ட் 28 திகதி செய்வதற்காக ஒஸ்டிரியாவின் வியானா தூரகத்தினால் ரூபா 11,963,560 (USD 66,285) தொகை மருத்துவ பட்டியல் செலுத்துதல் மற்றும் ரூபா 630,500 (EURO 3152) தொகை விமான பயணச் சீட்டு செலவுகள் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தன.	பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும்.	குறித்த அறுவை சிகிச்சை வசதி ஒஸ்டிரியாவில் இல்லையா என்பது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொண்டு இது தொடர்பாக முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் குற்றவாளிகள் இடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் மருத்துவ சிகிச்சை அவசர தேவை ஒன்றாகும் போது உத்தியோகத்தர் கடமையாற்றும் தூரகம் அமைந்துள்ள நாட்டில் தேவையான மருத்துவ வசதிகள் இல்லையென மருத்துவர் அல்லது வைத்தியசாலை ஒன்றினால் பெற்றுக் கொண்ட மருத்துவ சான்றிதழுடன் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும்.
(ஈ)	2023 பெப்ரவரி 22 திகதிய சனாதிபதி செயலாளரின் இலக்கம் பீஎஸ்/பீஎஸ்ஏ/சு	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர் தவிர ஏனைய அனைத்து அரச உத்தியோகத்தர்களும் சிக்கன வகுப்பில் விமான	பதில் வழங்கப்படவில்லை.	முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாததால் மேலதிகமாக செலவிட்ட

ற்றறிக்கை/4/ 2023 கொண்ட சுற்றறிக்கை	பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்ய வேண்டியதுடன் வர்த்தக வகுப்பில் பயணம் செய்ய தேவையெனில் போதிய விடயங்களை சமர்ப்பித்து முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது முன்னால் அமைச்சு செயலாளர் ஒருவர் 02 கடமை வெளிநாட்டு பயணங்களிற்காக வர்த்தக வகுப்பில் பயணம் செய்ததற்காக ரூபா 4,091,700 செலவிட்டு இருந்ததுடன் அதற்காக மேலதிகமாக செலவிட்ட ரூபா 2,165,272 தொகையை குறித்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		தொகையை குறித்த உத்தியோகத்தர் இடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4. வைப்பு

கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மூன்றாம் தரப்பினரிற்கு மீள் செலுத்த தற்காலிகமாக தடுத்து வைக்கும் வைப்பினுள் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் கூட்டுத் தொகை ரூபா 30,197,131 தொகையை தீர்த்திருக்கவில்லை.	கொவிட் தொற்று காலத்தில் இலங்கையர்கள் இந்த நாட்டிற்கு வருகை தந்து தனிமைபடுத்தலிற்காக பணம் வைப்புச் செய்துள்ளனர். சில நபர்களின் தனிமைப்படுத்தல் காலம் 14 நாட்களைவிட குறைந்ததால் எஞ்சிய தொகையை உரிமையாளர்களிற்கு மீள் செலுத்த அவர்களை தொடர்புபடுத்திக் கொள்ளும் கடினத்தன்மை காணப்படுவதால் குறித்த தொகையை கொடுப்பனவு செய்யும் நடவடிககை தாமதித்துள்ளது.	மூன்றாம் தரப்பினரிற்கு மீள் செலுத்த தற்காலிகமாக தடுத்து வைத்துள்ள வைப்புக்களை தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 வங்கிக் கணக்கு செயற்படுத்துதல்

	கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பர்லின் வெளிநாட்டு தூதரகத்தின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து 08 மாதம் முதல் 22 மாத காலம் கடந்துள்ள போதும் மாற்றப்படாத 02 காசோலைகள் தொடர்பாக யூரோ 239 ஆன கூட்டுப் பெறுமதியும் லன்டன் வெளிநாட்டு தூதரகத்தின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து 02 மாதம் முதல் 22 மாத காலம் கடந்துள்ள போதும மாற்றப்படாத 17 காசோலைகள் தொடர்பாக ஸ்டேலிங் பவுன் 2,179 இனது கூட்டுப் பெறுமதியும் காணப்பட்டன.	மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக கண்டறிந்து தேவையான முன்நடவடிக்கை எடுக்குமாறு தூதரகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	மாற்றப்படாத வைப்புக்களை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சிங்கப்பூர் வெளிநாட்டு தூதரகத்தில் 01 சந்தர்ப்பத்தில் 50 சிங்கப்பூர் டொலர்களும், பர்லின் வெளிநாட்டு தூதரகத்தில் 02 சந்தர்ப்பத்தில் 1,780 பூரோக்களும், பெரிஸ் வெளிநாட்டு தூதரகத்தில் 05 சந்தர்ப்பத்தில் 3,742 பூரோக்களுமாக கூட்டுத் பெறுமதி வங்கி கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடடிவக்கை எடுத்திருக்கவில்லை.	வெளிநாட்டு தூதரகங்களின் வங்கி கணக்குகளிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ள தொகையை எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.	வங்கி கணக்குகளிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ள தொகையை தாமதமின்றி இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	பெரிஸ் வெளிநாட்டு தூதரகத்தில் 55 சந்தர்ப்பத்தில 4,099 யூரோக்களும் ரோம் வெளிநாட்டு தூதரகத்தில் 35 சந்தர்ப்பத்தில 2,690 யூரோக்களும் பீஜிங் வெளிநாட்டு தூதரகத்தில் 13 சந்தர்ப்பத்தில 3,019 யுவான் மற்றம் 13 சந்தர்ப்பங்களில் 823 அமெரிக்க டொலர்களும் வர்யோ வெளிநாட்டு தூதரகத்தில் 02 சந்தர்ப்பத்தில 547 போலாந்து ஸ்டோல்களும் கென்பரா வெளிநாட்டு தூதரகத்தில் 54 சந்தர்ப்பத்தில 10,353	எதிர்காலத்தில் அத்தொகையை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	வங்கி கணக்குகளிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ள தொகையை தாமதமின்றி இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

	அவுஸ்திரேலிய டொலர்களும் கராச்சி வெளிநாட்டு தூதரகத்தில் 01 சந்தர்ப்பத்தில 7,000 பகிஸ்தான் ரூபாய்களும் சோள் வெளிநாட்டு தூதரகத்தில;; 14 சந்தர்ப்பத்தில 2,660,000 கொரியான் டொல்களுமாக கூட்டுத் பெறுமதி வங்கி கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடடிவக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஈ)	2022 செப்டம்பர் 21 திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 06/2022 குறிப்பிடுப்படுவதன் பிரகாரம் கலைக்கப்பட்ட தலைப்புக்களிற்குரிய செயற்படாத உத்தியோக பூர்வ வங்கி கணக்குகளை மூடிவிட வேண்டிய போதும், அவ்வாறாயினும், மூடப்பட்ட 04 வெளிநாட்டு தூதரங்களின் 06 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட காசுப் புத்தகம் பிரகாரம் 03 வங்கிக் கணக்குகளில் 46,859,350 அமெரிக்க டொலர்களும், ஒரு வங்கிக் கணக்கில் 144,343,540 ஈரான் ரியால்களும், ஒரு வங்கிக் கணக்கில் 21,917,023 நய்ஜீரியா நய்ராக்களும், மற்றைய வங்கிக் கணக்கில் 906 அவுஸ்திரேலியா டொலர்களுமாக பண மீதி காணப்பட்டதுடன் குறித்த வங்கிக் கணக்குளை முடியிருக்கவில்லை.	தூதரகங்களிலிருந்து வங்கி இணக்கக் கூற்று கிடைத்த உடனே அந்த கணக்குகளை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்படும். தெஹ்ரானில் சட்ட ரீதியான நடவடிக்கை இடம்பெறுவதால் அது தொடர்பாக கண்டறிந்து உரிய செயற்பாடுகளை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	செயற்படாத வங்கிக் கணக்குகளை முறையாக மூடிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	லன்டன் வெளிநாட்டு தூதரகத்தின் இலக்கம் 0088000221 கொண்ட வங்கிக் கணக்கிற்குரியதாக 2024 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் 9,611.39 ஸடேரிங் பவுன்களை இனங்காணாத வரவு பெறுமதியொன்று காணப்பட்டது.	4310 ஸடேரிங் பவுன் தொகையை எதிர்காலத்தில் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கவும், மீதியை மே மாத கணக்கு பொழிப்பில் சரிசெய்யவும் தேவையான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.	இனங்காணாத வரவு மீதிகளை இனங்கண்டு தாமதமின்றி தீர்ப்பனவு செய்ய வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புக்களை மேற்கொள்ளாமை

	கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வெளிநாடுகளில் இடம்பெற்ற விபத்துக்கள் மற்றும் இறப்பிற்காக இழப்பீடு செலுத்தப்படாத சம்பவங்களிற்கு உரியதாக 2014 ஆண்டிற்கு முன்னிருந்து நிலவிவரும் 340 கோவைகள் மற்றும் 2015 முதல் 2023 வரையான காலப் பகுதிக்குரிய 1435 கோவைகள் வேலைகள் நிறைவு செய்யப்படாது இழப்பீட்டு கோவைகளாக கொன்சுயுளர் பிரிவில் காணப்பட்டன.	இந்த இழப்பீட்டுக் கோவைகளின் அதிக அளவானவை சட்ட நடவடிக்கைகள் முடிவடையாததன் மீது செயற்பாட்டிலுள்ள கோவைகளாகும். தாதமங்கள் காணப்படும் கோவைகள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	தாமதிக்கும் வேலைகள் நிறைவு செய்யப்படாத இழப்பீட்டுக் கோவைகள் தொடர்பாக நிதமும் கவனம் செலுத்தி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கட்டார் நாட்டில் தொழிலிற்காக வெளிநாடு சென்ற நபரொருவர் அவசர விபத்தொன்றில் 2012 செப்டம்பர் 10 ஆம் திகதி மரணித்திருந்ததுடன் கொன்சுயுளர் பிரிவு இந்த சம்பவம் தொடர்வான இழப்பீட்டு கோரிக்கை தகவல்களை 2013 பெப்ரவரி 06 திகதி தூரகத்திற்கு அறிவித்திருந்தது. அவ்வாறே மரணித்த நபர் இழப்பீட்டிற்கு தகுதியாளவர் என உறுதி செய்துள்ளதாகவும் குறித்த இழப்பீட்டுத் தொகையை கூடிய விரைவில் அனுப்புவதாகவும் 2024 ஜுன் 09 திகதி தூதரகத்தின் மூலம் அறிவித்து அனுப்பியிருந்த போதும் 12 ஆண்டுகளை விட பழைய இந்த இழப்பீட்டு தொகையை குறித்த தரப்பினரிற்கு செலுத்தி இருக்காததுடன் தாமதத்திற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் தகவல் கோவையில் உள்ளடக்கி இருக்கவில்லை.	2012 செப்டம்பர் 10 ஆம் திகதி அவசர விபத்தொன்றில் மரணித்த நபரிற்கான இழப்பீட்டு தொகை தொடர்பாக கட்டாரில் அமைந்துள்ள நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை தொடர்பாக கட்டாரின் இலங்கை தூரகத்தினால் வழங்கிற்குரிய தற்போதைய நிலைமையை 2024 ஜுன் 09 ஆம் திகதி கடிதம் மூலம் இந்த அமைச்சிற்கு அறிவித்துள்ளது. அதன் பிரகாரம், திரு வை.எம்.பசீர் அவர்கள் இழப்பீட்டு தொகை பெற்றுக் கொள்வது தொடர்பாக தகைமை பெற்றுள்ளதால், அந்த இழப்பீட்டு தொகையை இலங்கை தூரகத்திற்கு கிடைத்த உடனே அறிவுருத்த நடவடிகை எடுப்பதாக கட்டார் தூரகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.	இழப்பீடு செலுத்துவது தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை தாமதமின்றி மற்றும் வினைதிறனாக மேற்கொள்ள வழிநடாத்த வேண்டும்.
(இ)	கட்டார் நாட்டில் தொழிலிற்காக வெளிநாடு சென்ற நபரொருவர் அவசர விபத்தொன்றில் 2012 ஒக்டோபர் 21 ஆம் திகதி மரணித்திருந்ததுடன் 2012 நவம்பர்	பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும்.	இழப்பீடு செலுத்துவது தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது

	06 திகதி இழப்பீடு கோரப்பட்டிருந்தது. 2023 மே 10 ஆம் திகதி இந்த சம்பவம் தொடர்பாக அமைச்சின் பின்தொடர் கடிதத்திற்கு 2023 திசெம்பர் 04 ஆம் திகதிய தூதரக பதில் கடிதம் பிரகாரம் உரிய காலத்தினுள் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்காததால் இந்த வழக்கு 2018 செப்டம்பர் 26 திகதி UNI CIAIMS QATAR Law Firms எனும் சட்ட நிறுவனத்திற்கு ஒப்படைத்தாக குறிப்பிடப்படுவதுடன் வழக்கு தாக்கல் செய்த சட்ட நிறுவனம் மற்றும் வழக்கு தாக்கல் செய்தது தொடர்பாக எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காததுடன் இழப்பீடு பெற்றுக் கொள்ள தாமதிக்காது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		கடமைகளை தாமதமின்றி மற்றும் வினைதிறனாக மேற்கொள்ள வழிநடாத்த வேண்டும்.
(ஈ)	வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்த தொழில் முகவரொருவர் ஊடாக 2011 ஆண்டில் சவூதி நாட்டிற்கு தொழிலிற்காக வெளிநாடு சென்ற நபரொருவர் 2012 ஒக்டோபர் 24 திகதி வாகன விபத்தொன்றில் முழுமையாக வலதுகுறைந்த நிலைக்கு ஆகியிருந்தார். 2016 செப்டம்பர் 28 திகதி இழப்பீடு கோரியிருந்த போதும் 2025 மார்ச் 03 திகதி வரை பொலிஸ் அறிக்கையை சமர்ப்பிக்காத காரணத்தால் இழப்பீடு செலுத்துதல் தாமதித்துள்ளதுடன் 08 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் இழப்பீடு கோரிக்கை தொடர்பான நடவடிககைகளை நிறைவு செய்திருக்கவில்லை.	சவூதி அராபியா நீதிமன்றத்தினால் அந்நாட்டு பொலிஸ் திணைக்களத்திற்கு விபத்து தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு கட்டளை இட்டுள்ளதுடன், அந்த அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைத்த பின்னர் முன்நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்திலிருந்து குறித்த அறிக்கை கிடைக்க தாமதிப்பதால் தூதரகம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றது.	இழப்பீடு செலுத்துவது தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை தாமதமின்றி மற்றும் வினைதிறனாக மேற்கொள்ள வழிநடாத்த வேண்டும்.
(உ)	வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்த தொழில் முகவரொருவர் ஊடாக 2009 திசெம்பர் 19 திகதி வீட்டு வேலைக்காக குவைட் நாட்டிற்கு வேலைக்காக வெளிநாடு சென்ற நபரொருவர் 2012 சனவரி 29 திகதி சந்தேகத்திற்கு இடமான விதத்தில் மரணித்திருந்ததுடன் மரணித்து 12	இலங்கையில் நடாத்திய மரண விசாரணை மற்றும் குவைட்டில் நடாத்திய மரண விசாரணையிற்கு இடையே வித்தியாசம் காணப்படுவதால், அது தொடர்பாக குவைட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்திடம் வினவப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தூதரகத்திலிருந்து இந்த அமைச்சிற்கு அனுப்பியுள்ள	இழப்பீடு செலுத்துவது தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை தாமதமின்றி மற்றும் வினைதிறனாக

	ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் அதற்காக இழப்பீட்டு தொகையை பெற்றுக் கொள்ள முடியுமா என பரீட்சித்துப் பார்த்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குவைட்டின் உள்விவகார அமைச்சிடமிருந்து கிடைத்துள்ள அறிக்கையின் குறிப்பிடப்படுவது இந்த மரணம் நோயால் ஏற்பட்டதாகுமென.	மேற்கொள்ள வழிநடாத்த வேண்டும்.
(ஊ)	2009, 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் கட்டார் நாட்டில் தொழில்புரியும் போது, விபத்தின் காரணமாக மரணித்த 06 பேர்களின் இழப்பீடு பெற்றுக் கொள்வது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்ய தகவல்களை பெற்ற சட்ட நிறுவனம் மற்றும் தூதரதத்திற்கிடையே கடித பரிமாற்றல் தொர்பான தகவல்கள் தூரகத்திடம் காணப்படவில்லை. கட்டார் தூதரகத்தில் உத்தியோகத்தர்கள் உரிய காலத்தில் இழப்பீட்டை பெற்றுக் கொள்ள முறையாக நடவடிக்கை எடுக்காததன் மீது இழப்பீடு மற்றும் படிகளை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.	பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும்.	இழப்பீடு செலுத்துவது தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை தாமதமின்றி மற்றும் வினைதிறனாக மேற்கொள்ள வழிநடாத்த வேண்டும்.

4.2 பெறுகைகள்

கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஏப்ரல் 01 திகதி பணிப்பாளர் நாயகத்தின் (கட்டுப்பாடு) உள்ளக விஞ்ஞாபனம் மற்றும் 2006 அரச பெறுகைகள் வழகாட்டிக் கோவை பிரகாரம் பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளாது 2024 ஜுலை மாதம் இரண்டு சந்தர்ப்பங்களில் பெளிநாட்டு பயணத்திற்காக ரூபா 6,855,350 செலவில் விமான பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	விமான பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அமைச்சினால் கொள்வனவு செய்துள்ள கொழும்பு 08, எல்விடகல மாவத்தை, மாடிவீட்டு	பத்திரத்தை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று தற்போது தேசிய வீடமைப்பு	ஆதனங்களின் உரிமையை அமைச்சிற்கு

	கட்டிடத் தொகுதியின் 17 வீட்டு அலகுகளிற்காக உரிமை உறுதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பியுள்ளதுடன், நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.	தாமதிமின்றி சுவீகரித்துக் கொள்ள் வேண்டும்.
(ஆ)	வாகனத்தை குறிப்பாக இனங்காள முடியாதவாறு வெளிநாட்டு தூதரக வாகன வகையினுள் For CIGAS user ஆக காட்டப்படும் கூட்டுப் பெறுமதி ரூபா 25,039,311 ஆன 3 வாகனங்களும் வாகன இலக்கம் குறிப்பிடப்டாத கூட்டுப் பெறுமதி ரூபா 136,586,483 ஆன 21 வாகனங்களும் காணப்பட்டன.	வாகன இலக்கங்களை சரியாக இனங்கண்டு மே மாதம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	தாமதமின்றி வாகன இலக்கங்களை இனங்காண வேண்டியதுடன் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	அமைச்சின் பெயரில் மோடார் வாகன போக்குவரத்து சபையில் பதிவு செய்திருந்த போதும் அமைச்சில் பௌதீக ரீதியாக காணப்படாத வாகனங்கள் 20 ஆகும்.	பதில் பின்னர் வழங்கப்படும்.	அமைச்சின் பெயரில் பதிவு செய்திருந்த போதும் அமைச்சில் பௌதீக ரீதியாக காணப்படாத வாகனங்களை இ னங்காண தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 நட்டம் மற்றும் சேதம்

	கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நட்டம் மற்றும் கைதவிர்ப்பு கூற்றில் இரண்டு வெநாட்டு தூதரகங்களின் 2002 மற்றும் 2009 ஆண்டுகளிற்குரியதாக பணத்தை தவறாக கையாலுதல் மற்றும் பணம் வைப்புச் செய்யாமை தொடர்பான 2 சம்பவங்களிற்குரிய ரூபா 16,176,674 ஆன நட்டம் காட்டப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 106 பிரகாரம் பணம் பற்றாக்குறை அல்லது தவறாக கையாலுதல் இடம்பெற்ற உடனே அத்தொகையை நிரப்ப வேண்டிய போதும் மேற்குறித்த நட்டத்தை அறவிடுவது தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த 02 சம்பவங்கள் தொடர்பாக கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அந்த வழக்கு நடவடிக்கை முடிவில் கிடைக்கும் முடிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறேன்.	தாமதமின்றி உள்ளக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த தொகைளை மற்றும் நட்டங்களை அறவிட செயற்பட வேண்டும்.

(ஆ)	குத்தகைதாரருடன் ஏற்படுத்திக் கொண்ட வாடகை உடன்படிக்கை முடிவடைய 11 மாதங்களிற்கு முன்னர் அதாவது, 2024 மே 03 திகதி முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட செலிங்கோ கட்டிடத்தின் 02 ஆம் மாடியில் நடாத்திச் சென்ற கொன்சுயுலர் பிரிவிற்காக பத்தரமுல்ல சுஹுருபாய கட்டிடத்தில் 16 ஆம் மாடியை வாடகைக்கு பெற்றுக் கொள்ள இலக்கம் அப/23/0149/626/002 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செலிங்கோ கட்டிடத்தின் 02 ஆம் மாடியில் மேற்கு கோபுரத்தில் கொன்சுயுலர் பிரிவை நடாத்திச் சென்ற 1640 பரப்படி அளவை 2024 மே 03 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலத்தினுள் எவ்வித பணிக்காகவும் பயன்படுத்தாது காணப்பட்டதுடன் அந்த காலத்திற்காக ரூபா 2,820,800 ஆன விளைவற்ற வாடகை தொகை செலுத்தப்பட்டிருந்தது.	இது தொடர்பாக முடிவொன்றை எடுப்பதற்காக வெளிவிகவகார செயலாளரின் (முன்னால்) அங்கீகாரத்தின் கீழ் 2024 ஜுன் 07 திகதி உத்தியோகத்தர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இலக்கம் அப/24/1240/619/018 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகார வணிக திணைக்களம், முதலீட்டு சபை மற்றும் இறக்குமதி அபிவிருத்தி இலிருந்து இணைத்துக் கொள்ள உத்தேசித்த உத்தியோகத்தர்களை 2024 இறுதி வரை இந்த அமைச்சிற்கு இணைக்கப்படல் இடம்பெறவிலலை, செலிங்கோ கட்டிடத்தின் 07, 09 மற்றும் 10 ஆம் மாடிகளும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளதால், அந்த பகுதிகளில் வேறு பிரிவொன்றை நிறுவும் இயலுமையும் இருக்கவில்லை.	அரச நிதியை செலவிடும் போது சிக்கன தன்மையை பேணிக் கொள்ள வேண்டியதுடன் தேவையற்ற செலவுகள் மற்றும் நட்டமடைதலை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வ அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	கென்பரா வெளிநாட்டு தூதரகத்தினால் திறைசேரி அங்கீகாரமின்றிய பயன்பாடாக 1999 ஆண்டு முதல் உத்தியோகத்தர்களின் இல்லங்களில் மின்சாரம், நீர் மற்றும் உயிர்வாயு பட்டியல்களிற்காக கொடுப்பனவு செய்து அவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு சனவரி முதல் திசெம்பர் வரை 13 உத்தியோகத்தர்களிற்காக 9,573,550 தொகை	குறித்த தகவல்களை தூதரகத்திடம் கோரியுள்ளதுடன் தகவல்கள் கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	அங்கீகாரம் கிடைக்காத எந்த செலவையும் செய்யக் கூடாது.

	செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து ரூபா 2,031,204 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.		
(ஆ)	மீளாய்வாண்டில் எந்தவொரு கடன் தவணையையும் அறவிடாத வெளிநாட்டு தூரகங்களில் சேவையாற்றும் 26 உத்தியோகத்தர்களிற்கு உரியதாக ரூபா 1,101,824 தொகையும், பல காரணங்களிற்காக சேவையை முடிவுறுத்திய மற்றும் சேவையை விட்டுச் சென்ற 17 பேர்களிடமிருந்த அறவிட வேண்டிய ரூபா 2,286,042 தொகையுமான கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கடன் மீதிகளை இனங்கண்டு அறிவிடுவது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	கடன் மீதியை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வ அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அமைச்சின் உயர் முகாமை மட்ட பதிவியொன்றான இலங்கை வெளிநாட்டு செவை பணிப்பாளர் நாயக 09 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக 08 உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் நியமித்திருந்ததுடன் மேலும் 07 உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் நியமித்திருந்தனர், அதன் பிரகாரம் அங்கீகார பதிவி எண்ணிக்கையை விஞ்சி 06 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், உதவி/பிரதி பணிப்பாளர் ஒரு பதவியும், தகவல் தொழில்நுட்ப உதவி பதிவியொன்றும், 6 அலுவலக உதவி உதவியாளர் பதவிகளுமாக அங்கீகார பதவி எண்ணிக்கையை விஞ்சி 8 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.	காலரீதியான தேவைப்பாட்டின் மீது அமைச்சின் அங்கீகார ஆளணிக்கு உரியதாக அந்த பதவிகளை அதிகரித்துக் கொள்ள நிதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	ஆளணி தேவைப்பாட்டை காலரீதியாக மீளாய்வு செய்து அங்கீகார ஆளணியை திருத்திக் கொள்ளவும் அங்கீகார ஆளணிக்காக ஆட்சேர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.